மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.09/2024
அ.வ.எண்.09/2013

மாரியம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. அமராவதி
2. அய்யமுத்து
3. வைத்திலிங்கம்
4. முத்தம்மாள்
5. கோகிலா
6. அங்கமுத்து (இறந்தவர்)
7. நாராயணசாமி
8. ஆறுமுகம்
9. ஆனந்த்
10. செந்தில்
11. சின்னையன்
12. விஸ்வநாதன்
13. வரதராஜன் (இறந்தவர்)
14. லட்சுமியம்மாள் (இறந்தவர்)
15. பூர்ணையன் (இறந்தவர்)
16. கோவிந்தராஜ்
17. தவமணி
18. பன்னீர்செல்வம்
19. பாப்பாத்தியம்மாள்
20. கமலம்
21. சரோஜா
22. தமிழரசி
23. விஜயகுமார்
24. ரஞ்சித்குமார்
25. குமுதவள்ளி
26. சேதுவராயன்
27. தமிழ்செல்வன்
28. கோமாதாசெல்வி
29. சம்பூரணம்
30. கலைச்செல்வி
31. இளங்கதிரவன்
32. ராகுல்காந்தி
33. சௌமியா

34. மணிவண்ணன்
35. கற்பகவள்ளி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

36. பொன்னாயா
37. அறிவழகன்
38. இந்திரா ... எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்

இம்மனு கடந்த 13.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5, 7 முதல் 12 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், 6, 13 முதல் 15 வரையிலான எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 16 முதல் 22, 25 முதல் 35 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 23, 24 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ரணதேவ் அவர்கள் ஆஜராகியும், 23, 24 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4(4) மற்றும் பிரிவு 151 கீழ் 1, 9 பிரதிவாதிகளுக்கு வாரிசு சேர்ப்பதிலிருந்து விலக்களித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துகக்ட்டளை பரிகாரங்கள் கோரி 1 முதல் 35 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, நிலுவையில் உள்ள நிலையில், 1, 9 எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாகவும், அவர்களது சட்டப்பூர்வமான வாரிசுகளை சேர்க்க வேண்டி எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 ம் எதிர்மனுதாரர் கடந்த 22.10.2022 ம் தேதியிலும், 9 ம் எதிர்மனுதாரர் கடந்த 06.04.2023 ம் தேதியிலும் இறந்துவிட்டனர். மேற்படியார்கள் உயிருடன்

இருந்தபோது அசல் வழக்கில் சம்மனை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், பதிலுரை தாக்கல் செய்யாததாலும் மேற்படியார்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதுவும் நாளது வரை நிலுவையில் இருந்து வருகிறது.

(ii) பின்னிட்டு மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பு இறந்துவிட்டாலும் மேற்படியார்களின் சட்டப்பூர்வ வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க தேவையில்லை என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் பல தீர்ப்புவழிச் சட்டங்களில் தெளிவாக பகரப்பட்டுள்ளதால் இவ்வழக்கின் 1, 9 எதிர்மனுதாரர்கள் உயிருடன் உள்ள போதே தோன்றாதரப்பினர்களாகிவிட்டதால் மேற்படியார்களின் சட்டப்பூர்வ வாரிசுகளை அசல் வழக்கில் சேர்ப்பதிலிருந்து விலக்கு அளிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 27ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 16 முதல் 22, 25, 26, 28 முதல் 35 வரையிலான எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 1, 9 எதிர்மனுதாரர்கள் உயிருடன் இருந்தபோதே நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர்கள் தோன்றாதரப்பினர்களாகியும், வழக்கில் எதிர்வாதம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 4(4)ன்படி இறந்துபோன 1, 9 எதிர்மனுதாரர்களின் வாரிசுகளை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க தேவையில்லை என்று கூறியிருப்பதும் தவறான சங்கதிகளாகும். மேற்படி விதியானது இவ்வழக்கிற்கும், வழக்கின் சூழ்நிலைகளுக்கும் பொருந்தாது.

(ii) மேலும் மனுதாரர் பாகப்பிரிவினை கோரி வழக்கிட்டுள்ள நிலையில், மேற்படி வழக்கானது பொய்யானது என்பதாலும், 1, 9 எதிர்மனுதாரர்கள், மனுதாரரோடு கூட்டு வைத்துக்கொண்டு மேற்படி வழக்கில் தோன்றாதரப்பினர்களாக இருந்து வருகின்றனர். 1, 9 எதிர்மனுதாரர்களின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து அனுப்பப்பட்டால் மட்டுமே அவர்கள் மேற்படி வழக்கில் ஏதேனும் எதிர்வாதம்

செய்கிறார்களா என்பது பற்றி தெரியவரும். மேலும் பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனு எவ்விதத்திலும் நிலைக்கதக்கதல்ல. எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என 16 முதல் 22, 25 முதல் 35 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துகக்ட்டளை பரிகாரங்கள் கோரி 1 முதல் 35 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, நிலுவையில் உள்ள நிலையில், 1, 9 எதிர்மனுதாரர் இறந்துவிட்டதாகவும், அவர்களது சட்டப்பூர்வமான வாரிசுகளை சேர்க்க வேண்டி எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர் கடந்த 22.10.2022ம் தேதியிலும், 9ம் எதிர்மனுதாரர் கடந்த 06.04.2023ம் தேதியிலும் இறந்துவிட்டனர் என்றும், மேற்படியார்கள் உயிருடன் இருந்தபோது அசல் வழக்கில் சம்மனை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், பதிலுரை தாக்கல் செய்யாததாலும் மேற்படியார்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதுவும் நாளது வரை நிலுவையில் இருந்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) பின்னிட்டு மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பு இறந்துவிட்டாலும் மேற்படியார்களின் சட்டப்பூர்வ வாரிசுகளை அசல் வழக்கில்

தரப்பினர்களாக சேர்க்க தேவையில்லை என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் பல தீர்ப்புவழிச் சட்டங்களில் தெளிவாக பகரப்பட்டுள்ளதால் இவ்வழக்கின் 1, 9 எதிர்மனுதாரர்கள் உயிருடன் உள்ள போதே தோன்றாதரப்பினர்களாகிவிட்டதால் மேற்படியார்களின் சட்டப்பூர்வ வாரிசுகளை அசல் வழக்கில் சேர்ப்பதிலிருந்து விலக்கு அளிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) 16 முதல் 22, 25 முதல் 35 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1, 9 எதிர்மனுதாரர்கள் உயிருடன் இருந்தபோதே நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர்கள் தோன்றாதரப்பினர்களாகி, வழக்கில் எதிர்வாதம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 4(4)ன்படி இறந்துபோன 1, 9 எதிர்மனுதாரர்களின் வாரிசுகளை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க தேவையில்லை என்றும் கூறுகூது தவறான சங்கதிகள் என்றும், மேற்படி விதியானது இவ்வழக்கிற்கும், வழக்கின் சூழ்நிலைகளுக்கும் பொருந்தாது என்றும், மேலும் மனுதாரர் பாகப்பிரிவினை கோரி வழக்கிட்டுள்ள நிலையில், 1, 9 எதிர்மனுதாரர்கள், மனுதாரரோடு கூட்டு வைத்துக்கொண்டு மேற்படி வழக்கில் தோன்றாதரப்பினர்களாக இருந்து வருகின்றனர் என்றும், 1, 9 எதிர்மனுதாரர்களின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து அனுப்பப்பட்டால் மட்டுமே அவர்கள் மேற்படி வழக்கில் ஏதேனும் எதிர்வாதம் செய்கிறார்களா என்பது பற்றி தெரியவரும் என்றும், மேலும் பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனு எவ்விதத்திலும் நிலைக்கதக்கதல்ல என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துகக்கட்டளை பரிகாரங்கள் கோரி 1 முதல் 35 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் எதிர்மனுதாரர் கடந்த 02.01.2024ம் தேதியிலும், 9ம் எதிர்மனுதாரர் கடந்த 06.02.2024ம் தேதியிலும் இறந்துவிட்டதாகவும், மேற்படியாளர்களது சட்டப்படியான

வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து மேல்நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என கூறி எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 29.04.2024ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(v) இந்நிலையில் மேற்படி 1ம் எதிர்மனுதாரரும், 9ம் எதிர்மனுதாரரும் உயிருடன் இருந்த காலத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் தரப்பை எடுத்துரைக்காத காரணத்தினால் அசல் வழக்கில் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படியாளர்களது வாரிசுதாரர்களை தற்போது இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், மேற்படி நடைமுறைகளில் இருந்து உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 4(4)ன்படி விலக்களிக்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், கடந்த 05.03.2013ம் தேதியில் தோன்றாதரப்பினர்கள் ஆகியுள்ளது தெரியவருகிறது.

(vi) மனுதாரர் தரப்பில் மேற்படி தன் கோரிக்கைக்கு ஆதரவாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால், **"1998(1) CTC 423, Krishnaveni and 4 others vs. Ramachandra Naidu and others"** என்ற வழக்கில், பத்தி 21ல், "The new sub-rule has been added enabling the Courts to give exemption from the necessity fo substitution of the legal representatives of a non-contesting defendant defendant to avoid delay which otherwise occurs in the substitution of the legal representatives of the deceased defendant, leading to delay in disposal of the suit. Hence there is hardly any justification to restrict its scope and operation only up to the time of abatement of the suit and not thereafter by writing something in the sub-rule which does not exist. Sub-rule (4) is independent of sub-rule(3), and the power given to the court is not in any way fettered by sub-rule(3). Even the deeming provision i.e., that the judgment in such cases, pronounced against the said defendant, notwithstanding the death of such defendant, shall have the same force and effect as if it had been pronounced before the death took place, indicates that the effect of abatement if any will be taken away once the court grants exemption under sub-rule(4) before pronouncing of the judgment."என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vii) அடுத்ததாக, மேற்படி அதே முன்தீர்ப்பில் பத்தி 22ல், “In sub-rule (4) of Order 22 Rule 4, no period is prescribed for seeking exemption from the necessity of substituting the legal representatives, and such exemption could be granted by court in appropriate cases at any time before pronouncing judgment. The said sub-rule is in the nature of an exception to the general rule that, when within the given time by law, if no application is made for substitution of the legal representatives, the suit shall abate. The learned District Munsif, in the case has found fault with the plaintiff for having not made an application for bringing the legal representatives on record along with the I.A. made under Order 22, Rule 4(4), which in my view, is not correct. When an application is made under the new sub-rule (4) for exemption from the necessity of substitution of the legal representatives, there was no need to get the abatement set aside arises only when the party wants to bring the legal representatives on record.” என்ற சட்டநிலைப்பாடுகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(viii) மேற்கண்ட சட்டநிலைப்பாடுகளை கருத்தில் கொள்கையில், ஏற்கனவே வழக்கில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இறந்த நபரின் சட்டப்படியான வாரிசுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதிலிருந்து விலக்களிக்க கோரி தாக்கல் செய்ய உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 4(4)ன்கீழான மனுவை பொறுத்து வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்ய கோரி தனியாக மனு எதுவும் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பது தெளிவாகிறது. அதேபோல் மேற்படி சட்டப்பிரிவின் நோக்கமே வழக்கில் தரப்பினரை சேர்ப்பதால் ஏற்படும் தேவையற்ற காலதாமதத்தை தவிர்க்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

(ix) இந்நிலையில் கற்றறிந்த 16 முதல் 22, 25 முதல் 35 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தன் மதிப்புமிக்க வாதத்தில், மேற்படி உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 4(4)ன்கீழான விதிவிலக்கானது பாகப்பிரிவினை வழக்கிற்கு பொருந்தாது என்றும், பாகப்பிரிவினை வழக்கை பொறுத்தவரை அனைத்து தரப்பினர்களையும் உள்ளடக்கி விசாரணை மேற்கொள்வது அவசியமானது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது. மேற்படி எதிர்வாதத்தை கவனமாக பரிசீலனை செய்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்வது யாதெனில், மேற்படி மனுதாரரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ள முன்தீர்ப்பே பாகப்பிரிவினை வழக்கு

தாக்கல் செய்யப்பட்ட உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 4(4)ன்கீழான மனுவிலிருந்து எழுந்த சீராய்வு மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தான் என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(x) மேற்படி முன்தீர்ப்பில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், விவாதங்களின் படியும் இவ்வழக்கில் இறந்த 1, 9ம் எதிர்மனுதாரர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்களை வழக்கு நடவடிக்கைகளில் தரப்பினர்களாக சேர்ப்பதிலிருந்து உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 4(4)ன்கீழ் விலக்களிக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே சமயத்தில் இந்த உத்தரவானது எதிர்வரும் காலங்களில் 1, 9 எதிர்மனுதாரர்களின் வாரிசுதாரர்கள் இவ்வழக்கில் தங்களையும் தரப்பினர்களாக சேர்த்து விசாரிக்க வேண்டும் என உ.வி.மு.ச. கட்டளை 1 விதி 10(2)ன்கீழ் ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் மேற்படி நடவடிக்கைகளுக்கு இந்த உத்தரவு தடையாக அமையாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே செலவுத்தொகையின்றி இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.18 10:48:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.18 10:48:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.